**குண்டசாலை பிரதேச சபை**

**கண்டி மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 23 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 24 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அக்குறணை பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) வெளி நிறுவகங்களில் இருந்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகக் கிடைக்கப்பெற்றிருந்த ஏற்பாடுகளின் நிர்வாகச் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த, ரூபா 105,517 தொகை நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) எரிபொருள் பெறுவனவுகளுக்காக குண்டசாலை பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 100,000 தொகையான பாதுகாப்பு வைப்புத் தொகை கணக்குகளில் விடுபட்டிருந்தன.

(இ) குண்டசாலை பிரதேச சபையும் பாணந்துரை பிரதேச சபையும் இணைந்து செயற்படுத்திய ஜப்பான் தொழில்நுட்ப காபனிக் உர உற்பத்திச் செயற்திட்டத்திற்காக ஜப்பான் அரசாங்கத்தால் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த பொருட்களை விடுவிப்பதற்காக சுங்க வரியாக இலங்கைச் சுங்கத்திற்கு 2016 யூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் ரூபா 5,798,287 தொகையான வரித் தொகை செலுத்தப்பட வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ் வரித் தொகை செலுத்தப்படும் வரையில் இதற்காக வங்கிப் பிணையாக இலங்கை வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 7,500,000 தொகை நிலையான வைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் சுங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய வரித் தொகை ரூபா 5,798,287 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்கு உரித்தான 50 காணி கட்டிடங்களினதும், 45 மயானங்களினதும் 04 விளையாட்டு மைதானங்களினதும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட முச்சக்கர வண்டிக் கட்டணம் ரூபா 624,924 தொகையான போதிலும் பட்டோலையில் ரூபா 1,915,475 தொகையாகக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,290,551 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கில் ரூபா 15,382 இற்கான செலவு மீதியொன்று காணப்பட்டதுடன் இது தொடர்பாக ஆராய்ந்தறிந்து தீரக்கப்படுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

பெறவேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 59,720,965 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 36,063,027 ஆகக் காணப்பட்டது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 50,810,492 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,232,251 ஆகக் காணப்பட்டது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

12 கணக்கு விடயங்கள் தொடர்பாக போதிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால், ரூபா 1,065,805,365 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.7 வங்கிக் கணக்குகள்

மெனிக் ஹின்ன மக்கள் வங்கியின் 157100190000052 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கின் 2015 திசெம்பர் மாத இணக்கக் கூற்று ஆய்வின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இனங்காணப்பட்டிராத பெறுவனவுகள் ரூபா 872,031 தொகை இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் சபையின் வருமானக் குறைவு கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ii) 2010 ஆம் ஆண்டு முதல் ரூபா 76,560 தொகையான 04 மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காசேட்டு மீதியுடன் சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) நிலையான வைப்பு வட்டித் தொகையான ரூபா 24,000 சபை வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காசேட்டு மீதியுடன் சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) 05 ஆண்டுகளுக்கு முன்பிருந்து வைப்புச் செய்யப்பட்டிருந்த தேறாத ரூபா 274,730 தொகையான 36 விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்தறிந்து வருமானத்திற்குக் கொண்டுவரப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்து வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) 2012 ஆம் ஆண்டின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் படி, 2008 ஆம் ஆண்டு முதல் நிலவிய 08 தேறாத வைப்புச் சந்தர்ப்பங்களின் பெறுமதியான ரூபா 25,059 தொகையும் இனங்காணப்பட முடியாத பெறுவனவான ரூபா 48,027 தொகையும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்டு மீள 2016 சனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(vi) 87 சந்தர்ப்பங்களிற்கு உரித்தான இனங்காணப்படாத கொடுப்பனவுகளான ரூபா 622,564 தொகை இனங்காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் தொடர்ந்து காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 94,887,182 ஆகக் காணப்பட்டதுடன், இதனொடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 81,885,063 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 13,002,119 இலான அதிகரிப்பு ஒன்று காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறான நிலுவை | ஆண்டின போது பட்டிலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் 2015.12.31 இல் உள்ளவாறு நிலுவையில் சேகரிக்கப்பட்ட வருமானம் | 2015 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம் | நாட்குறிப்புப் பதிவுகளின் மூலமான சீராக்கம் | மொத்தமாக அறவிடப்பட வேண்டிய அளவு 2015.12.31 |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி | 6,158,237 | 7,492,024 | 2,728,799 | 4,459,997 | (525,694) | 5,935,771 |
| ஏக்கர் வரி | 81,671 | 7,685 | 23,345 | 3,641 | (22,590) | 39,780 |
| கடை வாடகை | 352,773 | 4,688,895 | 352,773 | 4,227,180 | 2,568,169 | 3,029,884 |
| முச்சக்கர வண்டிக் கட்டணம் | 790,865 | - | 165,940 | - | - | 624,925 |
| கழிவுகளிற்கான கட்டணம் | 626,644 | 2,213,300 | 496,740 | 983,460 | - | 1,359,744 |
| நீதிமன்றக் கட்டணம் | 610,580 | 653,000 | 226,204 | - | - | 1,037,376 |
| முத்திரை வரி | 27,131,620 | 44,092,265 | 49,917,735 | 213,300 | - | 43,878,965 |
| **மொத்தம்** | | | | | | 55,906,445 |

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 வருமான விடயங்களில் ரூபா 55,906,445 தொகையான ஓர் வருமான நிலுவை காணப்பட்டது.

### 2.2.2 வீத வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீத வரி 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பிடப்பட்டு, கட்டணம் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், 2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் வீதவரி அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 6,158,237 இற்கான நிலுவை மீதி காணப்பட்டதுடன் ஆண்டின் போது பட்டியலிடப்பட்டவை ரூபா 7,492,024 ஆகக் காணப்பட்டன. நிலுவையில் ரூபா 2,728,799 தொகையான அதாவது 44 சதவீதமும் பட்டியலிடப்பட்டவற்றில் ரூபா 4,459,997 தொகை அதாவது 60 சதவீதமும் அறவிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வீத வரி மீதி ரூபா 5,935,771 ஆகக் காணப்பட்டது. வீத வரி செலுத்தத் தவறியவர்கள் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) அரசாங்கத் திணைக்களம் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களில் இருந்து 01 முதல் 10 ஆண்டுகள் வரையான காலமாக அறவிடப்படாதிருந்த நிலுவை வீதவரி ரூபா 932,814 ஆகக் காணப்பட்டது.

**2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம் 03 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டிய போதிலும் 51 வியாபாரங்களின் அனுமதிப்பத்திரம் திருத்தப்படாதிருந்தமையால் சபைக்கு ரூபா 204,000 தொகையான வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

(ஆ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது வியாபார அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிராத 113 வியாபாரங்கள் தொடர்பாக சபைக்கு ரூபா 113,000 தொகையான வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

(இ) 2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் (இதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் படி) 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட 38 தொழில்களிற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படாது வியாபாரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக ரூபா 152,000 தொகையான சுற்றாடல் அனுமதிப்பத்திர வருமானமும் பரிசோதனைக் கட்டணமும் சபைக்குக் கிடைக்கப்பெறாது போயிற்று.

**2.2.4 ஏனைய வருமானம்**

---------------------------

**(அ) ஏக்கர் வரி**

---------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான ஏக்கர் வரி ரூபா 39,780 தொகையானதுடன் இதில் ரூபா 35,736 தொகை அதாவது மொத்த நிலுவையில் 90 சதவீதம் ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக அறவிடப்படாதிருந்தது.

**(ஆ) முச்சக்கர வண்டி**

---------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த 929 முச்சக்கர வண்டிகளில் ரூபா 624,925 தொகையான கட்டணம் ஒரு வருடத்திற்கு மேலான காலமாக அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கடை குத்தகை**

-----------------------------------

1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் குத்தகைக்கிடப்பட்டிருந்த கடைகள் குத்தகைக்குப் பெற்றவர்களால் இடைக்காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் சபையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,037,376 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.3 மிகை அறவீடு**

நாளாந்தம் சேகரிக்கப்படும், வங்கியில் இடப்பட வேண்டிய பணத் தொகை வங்கியில் வைப்புச் செய்யப்படாது தவறான முறையில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன் காரணமாக ரூபா 136,466 தொகையான பணம் அறவிடப்படுவதற்காக என்னால் மிகை அறவீட்டு சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு உரித்தான 20 காணித் துண்டுகள், 45 மயானங்கள் மற்றும் 04 விளையாட்டு மைதானங்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 இன் விதிமுறைகளின் படி, சபையின் சகல காணி கட்டிடங்களும் வருடாந்தம் பரீட்சிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஏனைய சேவைகளுக்குச் சென்ற மற்றும் சேவையை விட்டு விலகிச் சென்ற 08 உத்தியோகத்தர்களிடம் இருந்து பல வருட காலமாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 218,770 தொகையான கடன் மீதி, அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 நகர அபிவிருத்தி அதிகாரசபை வங்கிக் கணக்கு**

1987 செப்தெம்பர் 30 ஆம் திகதிய 05/01/119 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரது கடிதத்தின் 02 ஆம் பந்தியின் படி, நகர அபிவிருத்தி வங்கிக் கணக்கின் பணம் அவ் அதிகாரசபையின் முன்னங்கீகாரத்துடன் மாகாண உள்ளூராட்சி நிறுவகத்தின் மூலம் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் அக் கணக்கில் காணப்பட்ட ரூபா 2,138,238 தொகையைப் பயன்படுத்தி எவ்வித அபிவிருத்திச் செயற்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 இனங்காணப்பட்ட நட்டம்**

2014 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, சபையின் 10 நூலகங்களில் இருந்து மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டிராத 430 நூல்களுக்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படுவதற்கு குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 61,849 தொகை உரிய

உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 வியாபாரக் கட்டிடத்தொகுதியினுள் கடைகள் குத்தகைக்கிடல்

பிரதேச சபையால் குத்தகை அடிப்படையில் வழங்கப்படுவதற்காக மக்களின் பணம், சபை நிதி மற்றும் ஏனைய வெளி நிறுவகங்களின் ஏற்பாட்டில் 07 கட்டிடத் தொகுதிகளில் 232 கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கேள்வி வழங்கப்பட்டு 10 வருட காலம் கடந்திருந்த போதிலும், அடிப்படைக் கேள்வித் தொகை முழுமையாக அறவிடப்படாதும் முறையான எழுத்து மூல உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்படாதும் கடைகளின் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. இதன் படி, 49 கடைகளில் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 20,770,410 தொகையான நிலுவைக் கேள்வித் தொகை அறவிடப்படுவதற்கு இருந்தது.

(ஆ) கேள்வித் தொகையைச் செலுத்தியிராத 47 குத்தகையாளர்களிடம் இருந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 3,968,750 தொகையான குத்தகை வாடகை அறவிடப்படுவதற்கிருந்தது.

(இ) 2016 மே 06 ஆம் திகதி வரையிலும் 59 கடைகள் மூடப்பட்டிருந்ததுடன் சில கடைகள் நிர்மாணிக்கப்பட்ட காலம் முதலும் 10 ஆண்டுகளுக்கு மேலான காலமாகவும் மூடப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக கேள்வி வழங்கப்பட்டிருந்த போதிலும், வியாபார நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டிராத கடைகளின் எண்ணிக்கை 57 ஆகும்.

(ஈ) பலகொல்ல மொறஸ்பிடியவத்தை கட்டிடத்தின் முதலாம் மாடியின் இடது பக்கத்தில் கடைசியாக உள்ள 26 ஆம் இலக்க கடைக்கு அருகாமையில் கழிவறை முறைமை சபையின் அங்கீகாரம் இன்றி மாற்றியமைக்கப்பட்டு, கடையாக மாற்றப்பட்டு குதிரைப் பந்தய வியாபாரம் ஒன்றை நடாத்துவது 2016 மார்ச் 02 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டது. அங்கீகாரம் இன்றி கழிவறை முறைமை கடையாக மாற்றியமைப்பது தொடர்பில் சபை எவ்வித நடவடிக்கையும் எடுத்திராது பாரிய பணம் செலவிடப்பட்டு அக் கட்டிடத்திற்கு தொலைவாக வேறு கழிவறை முறைமை ஒன்று சபையால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(உ) திகன பலநோக்குக் கட்டிடத்தின் மேல் மாடிக்குச் செல்வதற்கும் வியாபார நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகையில் மேல் மாடிக் கடைகள் திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்டிராததன் காரணமாக இக் கடைகள் வியாபாரத்திற்காக திறந்து வைக்கப்பட முடியாதிருந்தது. இக் கடைகள் சிலவற்றின் நிர்மாணிப்புகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் கட்டிடத்திற்கு அப்பால் வெளியில் இருந்த இரும்புக் கம்பிகள் இயற்கை அழிவுகளுக்கு உட்பட்டு துருப்பிடித்துக் காணப்பட்டன.

(ஊ) மனிக்ஹின்ன பஸ் தரிப்பிடத்தில், திகன பலநோக்குக் கட்டிடித்திலும் பலகொல்ல மொறகஸ்பிட்டியவத்த மாடிக் கட்டிடத்தின் கடைகள் வியாபார நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகையில் முறையான திட்டம் இன்றி நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக அக் கடைகளின் வியாபார நடவடிக்கைகள் பலநளிக்காமையால், மூடப்பட்டிருந்தது.

### 3.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) முதலாம் தரத்திற்கு உயர்த்தப்படும் குறித்த சம்பளத் தரத்தில் அமர்த்தப்படுகையில் 2006 ஏப்ரல் 25 ஆம் திகதிய 6/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு மாறாக சம்பளங்கள் தயாரிக்கப்பட்டமையால், சபையின் சேவையில் ஈடுபட்டிருந்த முன்பள்ளி மேற்பார்வையாளருக்கு 2006 சனவரி முதல் 2015 மார்ச் வரையான காலத்திற்கு ரூபா 502,705 தொகை மேலதிகச் சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மத்திய மாகாண கட்டுப்பாட்டு ஆணையாளர் 2014 திசெம்பர் மாதம் இது தொடர்பாகப் பரீட்சித்து அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், மேலதிகமாகச் செலுத்தப்பட்ட அச் சம்பளத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது உரிய முன்பள்ளி மேற்பார்வையாளருக்கு 2015 மார்ச் மாதத்தின் போது ஓய்வு பெற்றுக்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் ரூபா 173,089 தொகை அறவிடப்பட்டமை குறித்து செயலாளரால் எனக்கு 2016 யூலை 27 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மிகுதித் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைக் அமைச்சினால் பராமரிப்புப் பிரிவின் பயன்பாட்டிற்காக 2014 திசெம்பர் மாதம் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 566,858 பெறுமதியான 512 கல்வனைஸ் குழாய்களில் ரூபா 419,608 பெறுமதியான 379 குழாய்கள் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அக் குழாய்கள் 2016 யூன் 30 ஆம் திகதி வரையிலும் சபைக்கு மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. 164 கல்வனைஸ் குழாய்கள் களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளமை செயலாளரால் 2016 யூலை 27 ஆம் திகதி எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3.6 ஒப்பந்த நிர்வாகம்

#### 3.6.1 பலதொட்ட கால்வாய் பாலம் நிர்மாணிப்பு

சபை நிதியத்தில் இருந்து ரூபா 6,872,724 தொகையான வேலை மதிப்பீட்டின் படி, ரூபா 6,595,962 தொகைக்கு 2015 மே 27 ஆம் திகதி தனியார் நிறுவகம் ஒன்றிற்கு நிர்மாணிப்பு வேலைகள் ஒப்படைக்கப்பட்டு மீள ரூபா 9,187,055 தொகைக்கு மதிப்பீடு திருத்தப்பட்டு 2016 மே 30 ஆம் திகதி வரையில் ரூபா 2,181,589 தொகைப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. 2016 மார்ச் 15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) கடும் மழை காரணமாக கழன்று விழுந்திருந்த பாலம் பிரதேச சபை நிதியத்தைப் பயன்படுத்தி மீள நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இவ்வாறு நிர்மாணிக்கப்படுவதற்காக தொழிற்துறைத் தகமைவாய்ந்த பொறியியலாளர்களால் திட்டங்களும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், நில அமைப்பு, மண் மாதிரி ஆய்வு முதலியவை தொடர்பான கண்காணிப்பு இன்றி சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரால் ரூபா 6,872,724 பெறுமதிக்கு மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அவ்வாறு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட, ஆய்வு செய்த, பரிந்துரை செய்த உத்தியோகத்தர்களின், தயாரிக்கப்பட்ட திகதி போன்ற எந்தவிதமான தகவல்களும் குறிப்பிடப்பட்டிராத போதிலும், தலைவர் திகதியிடப்படாது மதிப்பீட்டை அங்கீகரித்திருந்தார்.

(இ) ஒப்பந்தகாரர் பாலத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்த போதிலும், நிலத்தின் நிலை சேற்றுடன் காணப்பட்டமையால், ஒப்படைக்கப்பட்டிருந்த மதிப்பீட்டின் படி நிர்மாணிக்க முடியாதென அறிவிக்கப்பட்டதன் காரணமாக பின்னர் மண் மாதிரிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு ரூபா 9,187,055 தொகைக்கு மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது. இத் தொகை மூல மதிப்பீட்டைப் பார்க்கிலும் 39 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் முதல் ஒப்பந்தக்காரருக்கே நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

(ஈ) இந் நிர்மாணிப்புகள் தொடர்பாக காலநிலை அறிக்கை மற்றும் இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 மனிக்ஹின்ன நகரத்தில் புதிய அலுவலகக் கட்டிட நிர்மாணிப்பு

சபை நிதியத்தின் கீழ் ரூபா தொகையான வேலை மதிப்பீட்டின் படி, ரூபா 31,630,912 பெறுமதியான வேலை மதிப்பீடு ஒன்றின் படி, ரூபா 24,918,599 தொகையான பணத்திற்கு தனியார் ஒப்பந்த நிறுவகம் ஒன்றிற்கு 2015 மே 29 ஆம் திகதி நிர்மாணிப்புகள் ஒப்படைக்கப்பட்டு 2016 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 3,512,186 தொகையான பகுதிப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாணிப்புகள் தொடர்பாக 2016 மார்ச் 15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) கட்டிட நிர்மாணிப்பிற்காக ”லங்வா” வகையிலான சுருள் உருக்குக் கம்பி பயன்படுத்தப்படுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்திற்கு அருகாமையில் உள்ள பாதுகாப்புச் சுவர்கள், தூண்கள் மற்றும் கொங்கிரீட் தட்டிற்காக “அசோக்” வகையிலான சுருள் கம்பி பயன்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. சுருள் கம்பிகளின் வியாபாரப் பெயர்களை மாற்றியமைப்பதற்கான பொறியியலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டிடத்தின் சுவருக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த இன்ஜினியர் செங்கல் நிர்மாணிப்பிற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு ஏற்க முடியாத தரத்தில் குறைவானவை என தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) இக் கட்டிட நிர்மாணிப்பின் மதிப்பீடு, நிர்மாணிப்புகள் மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகள் மத்திய மாகாண பொறியியலாளர் சேவைகள் திணைக்களப் பொறியியலாளரால் மேற்கொள்ளப்பட்டு ரூபா 316,482 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவ் உத்தியோகத்தரிடம் இருந்து அரசாங்கத்தின் செலவினம் அறவிடப்பட்டு, அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

09 செலவின விடயங்களிற்காக பாதீடிடப்பட்ட ரூபா 1,450,000 தொகையான ஏற்பாடுகளில் இருந்து எந்தத் தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டின் போது வருடத்திற்கான கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சொத்து முகாமைத்துவம்

பெறுமதி மதிப்பிடப்பட முடியாத 02 வாகனங்களும் ரூபா 745,000 பெறுமதியான 02 வாகனங்களும் 03 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக விளைவற்ற நிலையிலும் குறைவான பயன்பாடுடைய நிலையிலும் காணப்பட்டன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்
(ஆ) கடன்பட்டோர் /கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிர்வாகம்